**செய்தி வெளியீடு எண்.277** **நாள்.2.6.2009**

**மக்களவைக்கு முதன்முறையாகப் பெண்தலைவர்!**

**முதலமைச்சர் கலைஞர் வரவேற்றுப் பாராட்டு!**

**சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் முதன்முறையாக ஒரு பெண்மணி மக்களவையின் தலைவராகப் போட்டியெதுவுமின்றித் தேர்ந்தெடுக்கப்பட உள்ளார் என்ற செய்தி நம் செவிகளிலெல்லாம் தேனாகப் பாய்கிறது. அதுவும் அந்தப் பெண்மணி திருமதி மீராகுமார் அவர்கள் – நீண்டகாலம் மத்திய அமைச்சரவையிலே பங்கு பெற்றுப் பெரும்பணியாற்றிய தன்னிகரற்ற தலைவர் பாபு ஜெகஜீவன்ராம் அவர்களின் திருமகள் என்பது – நமது மகிழ்ச்சியை இரட்டிப்பாக்குகிறது. நாடாளுமன்றத்திலும், மாநிலங்களின் சட்டப் பேரவைகளிலும் பெண்களுக்கான ஒதுக்கீடு சட்ட வடிவம் பெறப் போகிற இந்த அருமையான காலகட்டத்தில், அதற்கு முன்னோடியாக – ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் வழிகாட்டும் தலைவராக திருமதி. சோனியா காந்தி அம்மையார் அவர்கள் பொறுப்பேற்றுப் பணியாற்றிக் கொண்டிருக்கும் இந்த நல்ல நேரத்தில் – ஒரு பெண்மணி இந்தியத் திருநாட்டின் மக்களவைக்குத் தலைவராவது நாம் அனைவரும் வரவேற்றுப் பாராட்டி மகிழக்கூடிய நிகழ்வாகும்.**

*** * ***

**வெளியீடு**: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9